198

உ

உலகப்பிரசித்திபெற்ற

கன்னிச் சமீன்

சரபம்

உடுமலை,

# முத்துசாமிக் கவிராயரவர்கள்

இயற்றிய

# பக்திரஸ கீர்த்தனங்கள்.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
ரப்பர் ஸ்டாம்பு மேக்கர், புக்ஷாப், புதுமண்டபம்
மதுரை
...ரை எக்ஸெல்ஸியர் பிரஸிற்
...ிப்பிக்கப்பெற்றது.
1918. [அணா-4

12 OCT 1918

O2:4ய
M18.

உ

பரமபதி துணை.

உலகப்பிரசித்தி பெற்ற

கன்னிச்சமீன் சரபம், உடுமலை

# முத்துசாமிக் கவிராயரவர்கள்

இயற்றிய

# பக்திரஸ கீர்த்தனங்கள்.

வெள்ளிக்குரிச்சி ஜமீந்தார் விஜயகுமார விஸ்வநாத
பங்காரு திருமலை நாயக்கர் என்ற

தர்மராஜா அவர்கள்

விருப்பத்தின் பேரில்

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்

இ. மா.

கோபாலகிருஷ்ணக்கோனாரால்

தமது

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1918. [அணா-4

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

180073



1235

உ

பரமபதி துணை

கன்னிச் சமீன் சாபம்

உடுமலை

# முத்துசாமிக் கவிராயரவர்கள்

இயற்றிய

# பக்திரஸ கீர்த்தனங்கள்.

12 OCT 1918

---

## விநாயகர் துதி.

### நேரிசை வேண்பா.

சீராருஞ் சங்கீதஞ் சேர்பதங்க ளிங்கிதமாய்ப்
பேராரித் தாரணியிற் பேசுதற்கு—நேராருந்
துங்கமிகுஞ்சங்கரனைச் சுற்றிக்கனிகொண்டோன்
தங்கக் கழலிணையே சார்பு

### சந்த விருத்தம்.

சகலஜனமன ரமியவிகசித தருணைநாடக ராஜரும்
புகழுமவரொடு பழகுமகளிரு மொருமை நாடக்ஷேமபுருஞ்
சொகுசுபலவித மிசையிலிசைவன சுரபிவாய்முதேயென
முகடளவுவர மருள்விகடகய முகவிநாயக மூலனே

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

### பல்லவி

கணநாதா உனதொரு
காக்ஷியிற்க டாக்ஷி வித்வ வரமது (கண)

### அநுபல்லவி

மணமேவும் பங்கய
மாமலரடியே காமுறுகின்றேன் (கண)

### சரணங்கள்

அகவலோதித் துதிசெய்
யவ்வையாரைக் கைலையேறச்செய்பவ (கண)

மகிமைத்தண்ட பாணி
மகிழ்சோதர வீரியகாரிய நய (கண)

மூலாதாரா யானை
முகனே பார்வதிமகனே பிரணவ (கண)

தாலமுத்து சாமி
சரபம் பரவுங் கரவங்குசதர (கண)

4. காவுநச்சுங் குஷிகஷிக்கரும் என்ற வர்ணமெட்டு,

இராகம் - இந்துஸ்தான் - பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

வேணும் வேணுந் திருவருள்புரி கணபதிமத
வேழமுகத்தவனே பரமத
யாளமகத்திவனே வல்லபைமணா
மேவுசுகத்தவனே (வேணு)

12 OCT 1918

அநுபல்லவி.

காணுமெத்தேவர்க்கும் ஆதிதேவா
கண்ணெதிரே யென்முன் வா வா
காரியாநுகூலம் நேர்வது சிலந்
தார் அணிந்து முத்துசாமி போற்றுங்காலங்
கண்டு கண்டு கண்டு (வேணு)

சரணங்கள்.

துங்கதா தன்குல மேவி மேவித்
தொண்டர் மலர்வகை தூவித்
தோத்திரங்கோடி கீர்த்தனம் பாடித்
தொல்லூதியம்பெறு நல்லூரில் நீடிச்
சுகம் சுகம் - சுகம் (வேணு)

## 5. ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் துதி.

வெண்பா.

பழனியப்பா வேரகத்தப் பாசெந்தி லப்பா
வழகுமலி சோலைமலை யப்பா—கழகம்
புகழ்பரங்குன் றப்பா பொறுப்பினங்க டோறுந்
திகழ் முருகப் பாகருணை செய்.

## 6. இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி

பாராமுகமேனையா இன்னமுஞ்சும்மா
பாராமுகமேனையா (பாரா)

அநுபல்லவி.

சீராருப்புக்கோட்டைப் பேரூய் வளர் திருநல்
லூரா மயிலேறுஞ் சிங்காரா முத்துக்குமார

சீலா அமுதலிங்கர்
பாலா அடியர்க்கனு
கூலா சத்துருசங்கார
வேலா நாலா விதத்தும் (பாரா)

சாரமில்லா தசமு சார வாழ்க்கையிலேவி
சாரம் மென்மேலும் வந்து சார மயங்கிப்போயினேன்

| | |
|---|---|
| தஞ்சம் | உன்னிருபாத |
| கஞ்சம் | என்னிடமேனே |
| வஞ்சங் | கொஞ்சமாகிலும் |
| நெஞ்சந் | திரும்பிடாத (பாரா |

| | |
|---|---|
| காடுநகர்நிதங்கொண் | டாடு செல்வமிருந்தாந் |
| தேடும்பேராசையல்லாற் | பாடும் பஜனைக்கில்லை |
| நாட்டங் | காவிசேர் திருக் |
| கூட்டம் | மகிழ்தரும் சி |
| ரேஷ்டம் | ஆகிலும்நான் எ |
| தேஷ்டஞ் | செய்யவிடாத (பாரா) |

| | |
|---|---|
| வேதன் அமரபுரு | கூதன் பொதிகைமலே |
| நீதன் அருணகிரி | நாதன் பரவு முத்தி |
| வித்து | நீயேபரம |
| வஸ்து | உடுமலையின் |
| முத்து | சாமிதமிழ் வா |
| சித்துஞ் | செவிகொள்ளாத (பாரா) |

## 7. திருமால் துதி.

இராகம் - நாட்டை - தாளம் - ஆதி.

பல்லவி

| | | |
|---|---|---|
| ஜெயராம | ரகுபதி | ஜெயராம |
| தீர வீர | மேருபார | கோதண்ட (ஜெ) |

### அநுபல்லவி

அயராம லடிமைடியை
யாளவேத யாள போத முதவிசெய் (ஜெ)

### சரணம்

நித்யமோக்ஷ கதிபெற
நினதுநாம மனதுநேமமொடுசொல்லி (நி)

முத்துசாமி கவிபுனை
மோகதாக மேகமாக வளர்தரு (ஜெ)

---

## 8-மான்குசரியா என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

### பல்லவி.

ராமஜெயமே நாளு நயமே
நரமோதினுண்டு க்ஷேமாதிசயமே (ராம)

### அநுபல்லவி.

நாதந்தருமணிக் கோதண்டவீர (ராம)

### சரணம்.

நெஞ்சே யிரண்டெழுத்தை
நேரமெல்லா முச்சரித்து
நேசர்மகிழ் வாரெனுமோர்
வாசக நமஸ்கரித்து

மிஞ்சுமவன் கீர்த்தனம் பாடிக்
கொஞ்சுமுத்து சாமியைக் கூடித்
தஞ்சமகலாதிரு நீடி
ரஞ்சிதவ யோத்தியிற் கிரீடி (ராம)

---

## 9. பரமசிவன் துதி.

எங்கேபோனவுமுன்கூட என்ற வர்ணமெட்டு.

இராகம்—பியாகு-தாளம்-ஆதி.

### பல்லவி.

பத்திசாதிக்கவி டாது மனைப்
பாசபந்தம் பொல் லாது (பத்)

### அநுபல்லவி.

துத்தியரவந் தொடையாயணிவோனே
துங்கநல்லூரமுத லிங்கப்பெருமானே (பத்)

### சரணங்கள்.

இல்லை இல்லை யென்ற ஏக்கம் பொரு
ளேராளப்பேராசை வீக்கம்
சொல்லின்பப்பெண்ணோடு தூக்கம் கைத்
தீட்டுப் புரட்டுவதி லூக்கம்
நல்லபுத்தியெல்லாம் நில்லாமலே நீக்கம்
நாடோடி நாய்நானே ஈடேற வெம்மார்க்கம் (பத்)

சக்களத்திகளின் சண்டை பஞ்
சாயப்பேச்சேனக்கோர் கொண்டை
முக்கிக்கத்தியே தொண்டை கட்டி
மூளைவறண்டது மண்டை
சிக்குழலண்டைப்போ லுட்கினேன் பொன் கண்டை
சென்டைத்தேடிச்சென்றேன் தண்டைபாதத்தண்டை ()
பல்லுப்போன ஒரு சிப்பு மறி
பண்ணினதோர்பூந் தோப்பு
வெல்லுவார்முன்கை வி ரூப்பு வெண்
மீசை மேலுங்கைக் கோப்பு
செல்வச் சினவேங்கை சிக்கியகட்டாப்பு
தெக்ஷணமூர்த்தியெஞ் சிவனேயுன்வெண்காப்பு (பத்)
உற்றேனுடுமலைப் பேட்டை வந்
தோதினேனருப்புக் கோட்டை
கற்றேன்யானுஞ்சில பாட்டை இன்னுங்
கட்டேன் குடியிருக்க வீட்டை
மற்றேன் சொல்லவேணும் வரிசைகெட்ட கேட்டை
மையற்கு சங்குநான் செய்வதெல்லாஞ் சேட்டை (பத்)

பற்றியெறியுந்தலை மேலே மணம்
பரிமளிக்கும் பூ மாலை
பெற்றணிந்தகதை போலே பிழை
மோசமாகுமுன் னாலே
சற்றிரங்கிமுத்து சாமிதமிழ்ப்பாலே
தஞ்சந்தா ராயோவுன் றாமரைப் பூங்காலே (பத்)

---

10. இராகம்-இந்துஸ்தான் காபி-தாளம்-ரூபகம்.

**கண்ணிகள்.**

இந்த உடம்பை நம்பி யிருக்கலாமா
வந்தவூழவாசைக்கே யுயிர் மரிக்கலாமா (இ)
எத்தனைகோடி பேரோ இறந்து போனார்
வைத்தபொருள்கள்யாவு மறந்துபோனார் (இ)
நம்பவேண்டிய தொப்பற்ற நாதன் பாதம்
அம்புவிதனக்கிதே தகல் லருமைப்போதம் (இ)
தத்துவாதீததெய்வஞ்ச தாசிவமே
முத்துசாமிக்கவிப்படி மொழிகுவமே. (இ)

---

## 12. கபரதரஹா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி

ஆரிடஞ்சொல்லி நான்
ஆறுவேனமுதவல்லி (ஆரி)

அநுபல்லவி.

நேரிலேயெனக்கு நீதாயல்லவோ
நீதியேது மில்லையோ பின்
நித்தநித்தமுந் தொல்லையோ (ஆரி)

சரணங்கள்.

அண்ணன் மகன் பிரமன் அமைத்தது போதும்
அந்தலட்சுமிக்குந்தான் அசட்டையெப்போதும்
எண்ணில்லா முறையிட்டும் ஏதோ யுன்காதும்
ஏதுமறியேனென்மீதுமோதுந் தீதுஞ்சூதும்வாதும் (ஆரி)
திமலக்குரங்கு செய்வது சேட்டை
திருட்டுத்தனமெனி லதற்கொரு வேட்டை
மாமருள்கொண்டுபா வந்தேடு மென் றேட்டை
வானருக்குட்கெட்ட கேட்டைவீணருக்குப்பட்டபாட்

[டை

மலையத்துவஜராஜ பாண்டியகுமாரி
மங்களவமுத சிங்கயர் பாரி
தலையுடு மலைமுத்து சாமிநிதங்கோரிச்
சாற்றுதிரு நல்லூரைக் காப்பாற்றுநீபேதாணுதாரி (ஆரி)

---

## 12. ஸ்ரீ மீனாம்பிகைத் துதி விருத்தம்.

தாயிருக்கப் பிள்ளை தானேங்கலாமா
  தரித்திரந்தனிலு மையன்
தூங்கியூட்டுவதுண்டு தாரணியிலென்னை நீ
  தனிமையாய் விடுத்தனை யினி
வாயிருக்கும் பிள்ளை வழிகண்டு வாழுமென
  மற்றெண்ணியோ வலாது
வன்மமோ நான்செய்த கன்மமோ அம்மம்ம
  வளமிருக மனிதர் தம்பாற்
போயிருக்கப்பெற்ற புன்மையால் என்மையாற்
  புகலொணா விகல்செயு நலம்
புக்கறிகிலேன் வேறு திக்கறிகிலேன் வந்து
  போதங் கொடுத்தருளுவாய்
வேயிருக்கும்பவள வாயன் சகோதரி
  விளங்குமரி மள பார்வதி
வேனில் வேடரு வெம்மை யானிதீர்தரு செம்மை
  மீனலோசனி யம்மையே.

## 13. ஸ்ரீ மீனாம்பிகை துதி.

சந்த்ராசரசமதலோலா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அம்மா மதுரை மீனாக்ஷி உன்
னருமையான காக்ஷி கிடைத்தால்
அடிமைக்கேது தாக்ஷி
அதுமூலக சாக்ஷி (அம்)

அம்மா சும்மாயிருப்பதும் நீயேது என்
றன்பஞ்சொல் லொணாது கடைக்கண்
சுட்டிப்பார்த்தென் மீது
சுகமருளிப் போது (அம்)

பெற்ற தாய்க்குபிள்ளை விரோதந்
தகாது நானுன் பாதம் பணிந்தேன்
றாங்கிக்கொள்ள நீதந்
தவரிடிற்ப்ர மாதம் (அம்)

ரத்ன மூக்குத்தியலங் காரி முத்து
சாமிசொல்லு தாரி சொக்கேசர்
முத்தங்கொள்ளும் பாரி
மோகனகெம் பீரி (அம்)

## 14. ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள் துதி.

### விருத்தம்.

மணிகொண்ட கிரியைப்போலும் வாங்குபூணூலுஞ்சாலுந்
திணிகொண்ட சத்திவேலுந் திமிர்மணக்கடம்புநாலும்
அணிகொண்ட மார்பின்மாலும்அரிவையர்இரண்டுபாலும்
பணிகொண்ட தண்டைக்காலும் பாடுவாமேலு மேலும்.

## 15. ஓரடிப்பதம்.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

### பல்லவி.

திருநல்லூர்க்கார்த்திகைத் தீபம் தெரி
சித்தவர்க்குப் புண்ய லாபம்
வைத்ததுஜெ கப்பிர தாபம் (திரு)

### அநுபல்லவி.

உருகியானந்தக்கண்ணீர் பெருகிவெள்ளங்கொண்டோட
உத்தமமார்க்கமென்று சித்தர்மற்றோர்க்குங்கூட
உச்சிகு வித்தக ரத்தினர்நீட
மெய்ச்சிவ பத்திப ழுத்த விசேட

உடலம்புளகம் பெறவே பவனியி
னிடை நின்றமுதம் பொழிமாமுகிலென
ஓவாதமூவர்சொன்ன தேவாரத்திருப்பாட்டை
ஓதி பஜனைவந்த வீதிக்கருப்புக்கோட்டை (திரு)

## சரணங்கள்.

மூலமாமுன்னெழுந்த பாலசந்த்ரகஜேசன்
மூதண்டமெங்குந்தன்னை மூக்கிலுணரும்வாசன்
சாலவினையன்பர்க்குத் தவிர்க்குமங்குசபாசன்
றன்மூலிகத்தில்வரத் தம்பியானவல்லாசன்

சமரச குமாரகுரு பொன்னகரில்
அமரர் அமரமுன்னொரு தரந்தரு

சத்திக்கைவேல்விநோத முத்துக்குமாரசாமி
தித்திக்க வேயிருபக் கத்திற்குலாவுதினைத்

தானவள்ளி மாது தெய்வ யானை யெனுமாது
மானயன ரோடுதிகழ் கானமயில்மீது

தங்கிவரச்சோபிதமி லங்குவதைப் பாரெனவி
டங்கர்சிலப்பேரமுத லிங்கரிடப்பால்விளம்பத்

தாயமுதவல்லி எயுமிடைமெல்லி
நேயமொடுபுல்லி வாயமுதுசொல்லித்

தனயுரிவரிருவர் சகலவுயிருநனி
தழைய அருள் புரிவர் கவலையிலையெனலுந்

தஞ்சமருவுஞ்சரணர் அங்கைகொட்டியார்க்கச்
நெஞ்சடையிருந்தவொருகங்கைபெட்டிப்பார்க்கத்

தன்காளை வாகனமு டன்காளியேறிவரு
பொன்காமதேனுவும லங்காரவீதிவரச்

சண்டே சுரர்நிர்மால்யங்
கொண்டே தொடர்ந்தேகுதல்

கண்டே தந்தைகால்வெட்டித்
தொண்டே சிறந்தவிதஞ்

சற்சனர் மெச்சிட அற்புத கற்பக
நாடாளு மிந்த்ராதியர்

உற்சவலட்சணம் இப்படிவைத்தவர்
ஏனாதி யன்பானவர்

தாமாகவந்தாரினை நாமாஎனும்போதொலி
தகுந்தகுமென்றுதவி யுகந்தவோர் துந்துமியு
மதிர்ந்திடு ஜண்டையொடு மிகுந்தா முழங்கவுயர்

தம்புருச்சங் கீதமுதிர் நாகசின்னம்பாட
அன்புருக்கங் தேடினவர் நாகமின்னந்தேடச்
சந்தி மகிழ் சரபத்தின் பேர்புனைந்த மாட்சி
முந்து முடிமலைமுத்துச் சாமிகண்டகாக்ஷி (திரு)

---

### 16. ஆசிரிய வண்ண விருத்தம்.

சந்தக்கழிப்பு.

*தத்தத்த தானதான தத்தத்த தானதான*
*தத்தத்த தானதான—தனதான*

பத்திப்பு ராணசீலர் நித்திப்பு நேர்கவீசர்
பட்சத்தி லேயெநாளும்— விலகாமே
பற்பட்ட வாய்கபோல மிச்சித்து வேசை மாதர்
பக்கத்தில் வீழ்வர்நேச— மணுகாமே
செத்திட்ட போதுமீகை வட்டிக்குமேதராத
சித்தத்து லோபர்வாசன்— மிதியாமே
செச்சைப்புயாசலாதி பச்சைக்கலாபம்வேல்கொள்
செப்பத்தை யேழையேன்மு— னருள்வாயே
சத்தித்த மாநடேசர் நெற்றிக்கண் மீதிலேசு
னித்துத்த டாகமேவி— வருபாலா
சஷ்டிப்ர தாபநேம முற்றுப்பராவு தூயர்
தத்திற்ப டாதுவாழ்வு— பெறநேர்வாய்
முத்திக்கு மோய்விலாத சித்திக்கு மூலமாகி
முட்டைப்பி ரானுமான— குகவேளே
மொக்கிட்ட பூநனூரி லர்ச்சித்த கோயினீடு
முத்துக்கு மாரசாமி— முருகோனே.

### வேறு சந்தக் கழிப்பு.

*தனத்தத் தாத்தத் தானன தானன*
*தனத்தத் தாத்தத் தானன தானன*
*தனத்தத் தாத்தத் தானன தானன—தனதானு.*

சிரித்துப் பார்த்துப் பார்வையி னுளுள
நெகிழ்த்துக் காட்டிச் சாடைக ளேபுரி
திருட்டுக் கூட்டுக் காரிக ணரிகள்—மயலாலே

திகைத்துத் தீர்த்துப் பாடிய பாவலன்
மலைக்கட் கோட்டிற் போய்விழு போதெதிர்
தெரித்துக் காட்டிப் பேருரு நீதர—விலையோமேல்

விரித்துச் சாற்றக் கூடிய தேதிரு
வுளத்துக் கேற்றுக் கோரவியாதிகள்
விலக்கிக் காத்துக் கேவி னேதநற்—பாமாலை

விளக்கிச் சாத்திப் பேணிய நீபமொ
டமைத்துக் கீர்த்திக் கோரடை யாளமு
மிகுக்கப் பூர்த்திச் சேவையை யோர்முறை—பருளாபோ

உரித்துப் போர்த்துத் தோலணி வார்மறை
யெழுத்தைக் கோத்துக் காலணி வார்துவை
ஒலிக்கக் கூத்துத் தானிடு வார்நுதல்—வருபாலா

உறிக்கட் டேக்குப் பால்தயிர் கோவியர்
மனைக்கட் பேர்த்துப் போனக நேர்பவ
னொருத்திக் காப்பட்டாடைசெய் மாயவன்-மருகோனே

அரித்தைப் பாட்டுக் கிரனை யேசிறை
பிடித்துப் போட்டுப் போனவன் மாமலை
யழித்துக் காக்கக் கூரயி லேவிடு—மதிதீரா

அடுத்துத் தோப்புக் கூவமெ லாமடி
யவர்க்குக் கோட்டிக் கானக னூரெனு
மருப்புக் கோட்டைக் கோபுர மேவிய—முருகோனே

## 18. வேறு சந்தக் கழிப்பு.

தனதனந்தந் தனதனந்தந் தனதனந்தந் தனதனே
தனதனந்தந் தனதனந்தந் தனதனந்தந் தனதனே
தனதனந்தந் தனதனந்தந் தனதனந்தந் தனதனே
தனதானே.

புருவமொன்றுந் திலகமுங்கண் பெறுமுனந்தண்கமலநே
நிருபதங்கும் பிடுதொழும்பின் புனிதர்சங்கம் புகுவதே
புகலுடம்பின் பயனெனுஞ்சங் கதிதெரிந்துந்தினமெலாம்
விருதாவே.

பொருள்விரும்புங்கனகுடும்பங்தொடர் தருஞ்சங்கடமதா
லலையுமென்றன்பிறகுவந்திங்கழுதுதெண்டன் புரிகுவார்
புடவையென்றுஞ் சரிகையென்றுங் கலநெலென்றுஞ் சிகு
விலா—மலடாலே

திருமணம்பின் பொருதரம்பெண்டருவதுவு டென் றிசைவதா
லதில்விளங்குஞ் செலவுமின் றன்புலமை பொங்குங்கொடையிலோர்
திறமையென் றும்பகர்வர்சஞ்சந்தடியிலங்கிங் குறுதிசேர்-மன தூடே

சிலபுகன் றுங் குடிதுலங்குங் கிரகமென் றும்ஸ்ரீபுதியவா
பரணமென் றுஞ் சவிகையென் றும் பலவிலங்கங் களிலுமே
சிதையுமுன்பிங் கியையுமுன் றன் றெரிசனந்தந் தடிமைபா
லருளாயோ

தருணமங்குஞ்சிசுவமைந் துங்குமரனென் றுந்திரைகள்சேர்
கிழவனென் றும்புதுமைதந் தன்றொருசெழும்வெண் கவுரிய
தரமுணர்ந்தின் புதவுதுங்கஞ் சிவமதங்கொண் டுளவெனு
வருவோனே

தருவர் முந்துஞ் செயமறிந்தன் றமரரின்பம் பழயவன்
றுயரவெங்கண் புரிபுலிங்கஞ் சரவணந்துன் றிடவொர்சேய்
தருநலந்திண் புவிபுகழ்ந்தும் பரவிவுய்ந்தங் குலவுமா
முதலோனே

அருணையின்கண் பிரமனுந்தண் டுளவனும்பண் டெதிரிடா
முடியுடன்பொன் சரணுமெங்கன் றளவிடுஞ்செங்கனலதா
யதிசயந்தந் தருளிவந்தங் கொருபொயன்பங் கயனெனு
நவில்வோனே

அணிபுயங்கம் படமொடுங்குந் தலைகடொங்குந்தெரியவாய்
தமிழ் வழங்கும் பஜனையுஞ்சங் ததமுழங்குந் திருநலூ
ரமுதலிங்கஞ் சிவமயங்கொண் டுலகமெங்குந் துதிகளோ
ரிறையோனே

## 19. நேமமாய்ப்பணி என்ற வர்ணமெட்டு,

இராகம்—இந்துஸ்தான்-பியாக்—தாளம்-சாப்பு.

### கண்ணிகள்.

தேமிகுந்தமுத்து சாமி செந்தமிழ்க்கு
தாரனை வருதிருநல் லூரனை ஜெய
தீரனைப் பச்சைம யூரனை முத்துக்கு
மாரனை யலங் காரனை

நீமகிழ்ந்திருக்க லாமேமுன்புசொன்ன
நேரமே விதியுமறு சாரமே இனி
நீக்குவேனோ உன்றன் வாக்கினுற் செய்யுப
காரமே இந்த நேரமே

கந்தசெண்பகம்பொ ருந்துடம்பு கொண்ட
ராணியே குமரதண்ட பாணியே உன்னைக்
கண்டுகொண்டபின்பு வந்திடும் பெயர்கல்
யாணியே மனம் பேணியே

சந்ததந்துலங்கு மிந்த வின்ப நம்பு
நேசமே சிறிதுமில்லை மோசமே மிகு
சாந்தமான விழி நேர்ந்த தேகந்திவ்ய
வாசமே கொள்ப்ர காசமே

20. இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஏகம்.

பல்லவி

கருணை நீ புரிவாயே யடியேன்
கவலையுந் தெரிவாயே

12 OCT 1918
MADRAS

அநுபல்லவி

பிரணவ வேதா அரிமுதலோர் தொழும்
பரவு திருநல்லூர் நீதா
அருளினடேசர் அமுதலிங்கேசர்
அகமகிழ் குரு நாதா (கரு)

அநித்திய வாழ்விற் செனித்தவெம்மாயைக்
ககப்படாதிருக்க வென்னெண்ணம்
உனைத்துதித்திடவே நினைப்பிக்காயானல்
உய்வதிங் கெவ்வண்ணங் (கரு)

உள்ளே பகையும் உதட்டிலே யுறவும்
உள்ளபாசாங் கரைக்கூடித்
தெள்ளறிவழிந்தேன் செய்கையை மறந்தேன்
தீனன் எனைநாடிக் (கரு)

புவனத்தைச் சுற்றி ஒருவட்டம் நொடிக்குட்
போய்த்திரும்பின மயில்வீரா

கவி முத்துசாமி மனமொக்கப்பேசுங்
கார்யா னுசாரா (கரு)

---

## 21. வெள்ளிமலை யொத்தபலமேடையென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

### கண்ணிகள்

உடுமலையின் முத்துசாமிப் பாட்டை மகிழ்ந்
தோதிடுநல்லூரருப்புக் கோட்டை தனில்
உயருமமுதலிங்கர் குமரன ருள்விளங்கு
முருகன் அரி மருகன்

கடகளிறு தாதன் குளத் தண்ணான் சடை
கட்டும் பால சந்திர முக் கண்ணான் மகிழ்
கந்தனென்ற தம்பினட ணந்தருது ரங்கமயில்
வீரன் அலங் காரன்

காணவேணுங் காணவேணு மென்று நான்
காதல்கொண்டு நீதமுடன் சென்று நேர்
கண்டுதெரி சித்த பலன் மண்டையுளமட்டு மற
வேனே யினி நானே

பூணுமணித்தேர்வடத்தைத் தொட்டேன் அவன்
பொன்னடிக்கண் ணுண்ணியேகும் பிட்டேன் அப்
போது கந்தவேளிருந்தசோதியென்சொல்வேன்மகிழ்ந்து
போனேன் அருளானேன்

சுத்தமிகு ரத்ன மணி க்ரீடஞ் சிவ
சுப்ரமண்யன் அற்புதல லாடம் பெற்ற
சுகிர்தந் திலகந்திகழ் வதனங்க மழுங்குறு
நகையே யொரு வகையே

வைத்த விரு பக்கமிரு பெண்கள் சாமி
வடிவம் பருகுமவர் கண்கள் அங்கு
வந்திருந்த தொண்டர் பந்தி முந்திநின்ற வெண்பசுந்து
நானே சொல்லு வேனே

---

## விருத்தம்.

இன்ன மெத்தனைநாள் இருந்தாலு மொருநாள்
இறப்பதே சத்தியந்தான்

என்றெண்ணியெண்ணியான் உன்சந்நிதிக்குவந்
திடுகின்ற முறையொன்றுகேள்

புன்னகைப் பெண்மாயை தன்னிலே மனமது
புகுந்துகொள் ளாமலெங்கும்

பொய்வார்த்தை விள்ளாமல் ஐயமேற் பார்களைப்
போவென்று தள்ளாமல்வீண்
சொன்னகெரு வத்திலே துள்ளாமல் அவகீர்த்தி
சூழாம லுள்ளவரையுந்
தொண்டர்கீழ்த் தொண்டனுன் உன்கோயில்வலமாய்த்
துதித்திட விரும்புகின்றேன்
தென்னைமா பலவுமல் லிகைமுல்லை வர்க்கஞ்
செழித்ததிரு நல்லூரில்வாழ்
செம்பாக குணசீல சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவேலனே

---

23. இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏறு தியே

ஈடேறும் வழித்திரு நீறு கொடுத்தருள் (ஏறு)
எத்திக்கினு மெச்சப்பகர் வெற்றிக்கொருகட்கத்தொழில்
எதிரே நின்றதி சூரன்கதியால் வென்றதுபேசும் (ஏறு)
இன்பங்கொண்டென்றும் மின்பங்கண் டங்கு (ஏறு)
ஈன்றோர்புகழ்மேம்பாடுறுசான்றோர்குலவேந்தாகிய (ஏறு

அநுபல்லவி.

காஞேர்கூடு மெம்பிரான் தம்பிரான் கதிசும்மா தாரான்
நீகாடி நெக்குருகி நெக்குரிகியுள்ளந்
தேனைகப் பெற்றுய் சிவானந்த வெள்ளம் (ஏன)

சரணங்கள்.

ஏற்றிவைத்துத்தானேருத ஏணியைப்போலே
எவர்க்குஞ்சொல்லுவேனெனக்கில்லை நெறிஇக்குறையாலே
போற்றினேனுக்குப் பூதிசாதனம்
பூரணமாய்ச்சேரக் காரணசாதனம்
பூமிக்கிடை திருமித்துத் தாமித்தைகள் விடுவித்து
தேமிக்கனிதமிழ்முத்துச் சாமிக்குதவியவஸ்து (ஏன)

இஸ்கே பேகல்மேஹோஸைமன என்ற வர்ணமெட்டு.

இரா-இந்துஸ்தான்-தோடி—தாளம்-ஆதி.

பல்லவி.

நானிருப்பது திரு நல்லூரே தூது
நாடியெனக்கொருவர் சொல்லாரே

அநுபல்லவி

தேனிருக்குங்கடம் போனெருகுக்கிடஞ்
சேர்கொடி முத்துக்கு மாரசாமிதன்னிடம் (நா)

வண்டுகிளியன்னம் உண்டுசொல்லமுன்னம்
கொண்டநெஞ்சந்தூது விண்டுவராமலின்னம் (நா)

முந்துமுடுமலை முத்துசாமிச்சொல்லைப்
பைந்தமிழிற் கொள்ளும் பசுந்தோகையானெல்லை (நா)

## குடியிற் பிறந்த குயிலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

என்னபிழைப்பெனக் கென்னசிரிப்பெனக்
கென்னகுதிப்புப்பின் னென்னமதிப்பு
மன்னுநல் லூர்விடங்கா கிடைக்கும்
பொன்னே யமுதலிங்கா

மான்மழுவார் கான்மலர்க்கை
வான்முதலே வன்னியங்கண்ணுதலே

பூப்புக்குமரிகள் காப்புக்குடும்பப்போல்
லாப்புக்கு மென்னிரு மாப்புக்கும்வந்த
மூப்புக்குங் காரணமாய்ச் சுடலைத்
தீப்புக்கந் தோபிணமாய்

முடியுமுன்னே நெடிதருளி
யடிமைகொள்ள முன்வரக்கூடாதோ

நீர்க்கண்டடந்தப்பிநின் சீர்க்கண்டர் போற்றிசெய்
மார்க்கண்டன்பத்தியும் மேற்கண்டறியேன்
கார்க்கண்ட சுந்தரனே நம்பிக்குக்
கோற்கண்ட ரும்பரனே
காமர்முத்து சாமிசித்த
பேமிகுத்த காருண்ய கங்காதரா

26 தில்பரநஹி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி

ஆயிரங்கவி பாடினாலு மதிலென்ன பலனே நான் (ஆ)

அநுபல்லவி.

அருளாட்சி மாட்சி யமையக் கண்டிலனே (ஆ)

சரணங்கள்.

போயிறந்தே பல யாதகிருத்திப்
பொருளுப தேசமொன்று
நாயிறந்தாற்போ லிறவாத முன்னமெஞ்
ஞானப்ர காச மொன்று
நண்ணுகிலேனே புண்யம் பண்ணுகிலேனே
நண்ணியசிவ புண்ணியர்பீச்சிலுண்ணுகிலேனே
நன்மை யார்க்கும் எண்ணுகிலேனே (ஆ)

அண்டியகிரன் பொய்மொழிகிள்ளை
யருணகிரி நாதன்
அகஸ்தியர்முத லெவர்க்கும் ப்ரணவ
மளித்தநன் னீதன்

அருப்புக்கோட்டையிலே நீ இருப்புக் காட்டையிலே
யல்லாமலுண்டோபின் னெல்லோருமேதிரு
நல்லூரின் பாட்டையிலே
யைக்யமுத்தி யமலம் நாட்டையிலே (ஆ)

ஆனசகலர் அருட்குருவாலே
யடையுங் குருபரனே
ஆறுமுகங்கொண்டு சூரரைவாட்டி
யடும்பன் னிருகரனே

யந்தக்கரணமே யர விந்தச்சரணமே
யாமயமறவுடுமலைமுத்து சாமி தருணமே
யாக் குன் கீர்த்திக் கதுவுங்கிரணமே (ஆ)

## 27. விருத்தம்.

பூதவச மானகர்க் கீரன் கவிக்குப்
பொருப்பிடித் தாளவில்லையோ
போய் உருளமலையேறும் அருணகிரி முன்வந்து
புகழ்வரந் தரவுமில்லையோ
கேதகர மீனவன் சுகசரீ ரம்பெறக்
கிருபைநீ செய்யவில்லையோ

கிரணமுடி இந்திரன் பதவியும் பொலியக்
கிலேசந் தவிர்க்கவிலேயோ
மூதறிவு தந்தெனைப் பாதுகாப்பதுமட்டு
முடியாததோ முருகனே
முப்பத்து முக்கோடி தேவருங் கைதொழும்
முத்துக்கு மாரசாமி
சீதசந் திரபாத கணபதி சகோதரா
செழிதிருநல்லூரில் வாழுஞ்
செம்பாக குணசீல சம்பூர்ணசுகலோல
சிங்கார வடிவேலனே.

---

பொன்னுலவும் பன்னிருகை வேலா என்றவர்ணமெட்டு.

28. இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

**கண்ணிகள்.**

ஓதிருநல் ஊர்வளரொய் யாரா புகழ்
ஓராயிரம் ஆராய்விவ காரா பால
உண்ணுமுலை கண்ணுனகு மாரா இந்த
உலகளவு மொருநொடிதனில் வலமிடவரு திடமருவிய
உக்ரரண விக்ரமம யூரா இம்ப
ரும்பரெலா நம்பியவு தாரா.

சாதிமதச் சேதியில தீதா தமிழ்ச்
சந்தமெனில் முந்திமகிழ் காதா சிவ
சங்கரனும் பொங்கநவில் போதா முத்து
சாமிக்கவி யுடுமலையனை நேமித்திட வருள் புரிகிற
தங்கநிறத் தண்கமலப் பாதா மனந்
தங்குநிறை கின்றவருள் தாதா (ஓ)

பக்குவமா எற்குறுசி நேகம் உன்மேற்
பற்றினது முற்றியநல் யோகம், எண்ணம்
பத்திதனை நத்திடுவை போகம் தந்து
பாலித்தரு ளேயித்தகி மேலிட்டிதம் வாசித்துளம்
பாடுவது மேமதுர பாகம் பழி
யோடவரும் பாடக ளனேகம் (ஓ)

முக்கியமோர் பேச்சுமில்லை மூச்சும் இல்லை
மோசமொரு வேளையெனக் காய்ச்சும் சுரம்
மூண்டதுகா ணீண்டவிழிப் பாய்ச்சும் புனல்
முத்துக்கள்வெ டித்துச்சித றத்தக்ககணத்தில் விரை
முந்துவதோ சந்தனமாம் பூச்சு ஊர
நிந்திடவே வந்ததையோ ஏச்சு (ஓ)

சித்தமதுள் வைத்திடும் விசாரம் தனைச்
செப்பமன மொப்பலையிவ் வாரம் வாயிற்
செல்வதில்லை எள்ளளவா காரம் நான்

செய் தவமதி லெய்தியகிளி வைத்துபல நொய்தவை தரு
சீர்களெலாம் பார்வையின் நேரம் நீயே
தேர்வதுதான் கோறுமுப காரம்

29. ஓரடி.

இராகம்-நாட்டை-ரூபகம்.

பல்லவி

விதரணகணபதி ததிவருவாய் நம்பினேனுந்தன்
பதமலர் நிதிகதி யதுதருவாய் (வி)

அநுபல்லவி.

மதுரபக்ஷணை வகையனந்தம்
வைத்துப்படைத்து வாழ்த்திவாழ்த்தித்
துதிசொல்லித்தலை தாழ்த்தித்தாழ்த்திச்
சுடுமணல் மெழுகென மனமுடை அடியவரிடம்
வரவெனதடை சோதிக்காதே வாதிக்காதே (வி)

சரணங்கள்.

நம்பிக்கையாலொருத்தி தன்னைத் தூக்கிக்கைலையிருத்தி
நம்பிக்கைநக்தசித்தி இந்த நானிலஞ் சொல்லும் நத்தி
நாகப்பதியிறை பெறுமொரு சோலைக்கும் புனல்
காகத்தரு வொடுதாவரு வீலைக்கும் மாற

ஞானுக்கும்பொருளெனவதன் மேனுக்கும்பிரணவமெனும்
ஞீலச்சிந்தாரவதனசு    சிலத்தைங்கர சிவசுத
    நானுவித நீபுரி பாடனுக்குஞ் சாக்ஷி    பலபல
    தாமோதுவர் ஆலயம் நாடனுக்கும் எண்ணமற்றிந்த
ஞாயடியேன் செந்தமிழா    னுன்பதமே பாட
ஞீயுதவும் பண்பதனுல்    அன்பர்கள் நேர்கூட
ஞாடகசம் பந்தமதே    யெங்கணுநாட
ஞாபக மொன்றும்பெறவேன்    என்கலி நோயோட
        நர்ட்டாமதமே    செயல்வினை
        யாட்டாஙிதமே    திருவருள்
        கூட்டாயுதமே    யுளதனை
        யோட்டாளிதமே    னையா
ஞாமத்தியல் பெறு    முத்து
சாமிக்கவிபுனை    வஸ்து
ஞீமற்றினை யறு    சித்தா
நேமப்படி தெரி    சித்தா
    நலம்பெறமிக    வலங்கிர்    தமுடன்
    இளம்பிறைமுடி    தலங்    கிடவுயிர்
        ஞாற்புயா சலற்புதமா    (வி)

---

### கலித்துறை.

முனந்தவ சீலர் மொழிதீர்த்த யாத்திரை மூர்த்திதெரி
சனந்தல வாச மிவைவே றனுட்டிக்கச் சக்தியுண்டோ
தினந்தமி யேனுனை யேநம்பி னேன்வினை தீர்புகழ்தற்
கனந்தனு மேமயங் கும்பழ னைபுரி யாண்டவனே.

### ஆயேசையா என்ற வர்ணமேட்டு.

இராகம்-அபுரூபம்-தாளம்-ஆதி.

### பல்லவி

என்னசொல்வேன் இருக்கின்ற விசாரம்
எல்லாந்தீர்ப்ப தின் பாரம்-மிகு

### அநுபல்லவி.

உன்னதமான வடிவேலா-தெய்வ
பொன்னகர் போற்று மனுகூலா

உமாபதியின் பாலா
சமானமற்ற லோலா
உற்பவஞானப்ரபலா சுப்ரமண்யா கற்பகமே (என்)

### சரணம்.

முன்னம் அருணகிரி நாதன் தமிழ்ச்
சொன்ன சங்கத்திலேனி ஞேதன் என்று

முன் கைக்கிளி யாக்கி வைத்த
மூல மெல்லாம் நோக்கி நான்
முறையிட்டேன் குறைபட்டேன் மதிகெட்டேன்விதிவிட்டேன் (என்)

ஜீவகாருண்ய மெனக் கில்லை பல
பாவமுஞ்சூழ்ந்து கொண்ட தொல்லை ஐயா
சித்ரமயில்வீரா கவி
முத்துசாமி நேராய்
தெரிசனமே தரவருநீ பரமகுரு தெரிகுவையே (என்)

**அள்ளி அள்ளிக் குடிக்கும் என்ற வர்ணமெட்டு.**

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்—ஆதி.

**கண்ணிகள்.**

சீர்த்தி மிகுந்ததிரு மூர்த்தியா மோரொரு
நேர்த்திகொண்டதைப்பார்த்திரு-நல்லோரொரு ()
உன்—கெருவமொடுங்கி யருகிலிருந்து
பொருளுணர்ந்துகொ ளிருளும்நெஞ்சே (சீர்)

காத்திருந்தசித்தருங் கண்வாசி யோகநங்
காயசித்திக்கு நத்தியே-மனம்பற்றிடுபே (காய)

அந்தக்—கஞ்சிமலையில் வந்துகுகையில்
உஞ்சிதவம னந்தஞ்செய்கிறார்(சீர்)

மூன்றுகுணங்களிலுந் தோன்றுமுன் சித்திரம்
மெய்முத்து சாமிமித்திரம்—உன்நற்றிரம்(மெ)

இந்த—மூதுலகினை யாதியருளிப்
பாது புரிந்து மோதியழிக்குஞ் (சீ)

தேன்தாருந்தாமரைமேல்என்றபர்லாழிமேற்
றிவ்யகைலாச வெற்புமேற்—பாலாழிமேற் (றி)

அம்—செஞ்சொ லணங்கி பொன்பெருமங்கை
அம்பிகையென்ற பெண்களுடனே (சீர்)

---

## தாஜராஜ தாஜராஜ என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

வந்திவ்வேளை தந்தருள்வாய் மகிமைமின் காக்ஷி—ஒளிர்
மாணிக்க மூக்குத்திமண்டலம்பாணிக்கும்மதுரைமீனாக்ஷி
சந்ததந் திருமண சுந்தரவாமந் தங்கியவோர் சூக்ஷி
கமனகமகிழ் மந்தாரை மல்லிகை சாரசமிரு வாக்ஷி [க்ஷி
தாளிலணிந்துகண்ணோர்பணிந்தாலவர் தமக்குண்டோதா

சரபகவிப்பேர் மருவியமுத்து

சாமிமனோசாக்ஷி சாமி மனோசாக்ஷி சா. சாக்ஷி (வந்)

---

இராகம்-தோடி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்

சர்வலோக சாக்ஷியே தாயேமீ னாக்ஷியே

தாட்டீகமான தடாதகைப் பிராட்டியே

தாக்ஷிநெட்டியே சாக்ஷிகாட்டியே [லே

தாங்குவாய் தருணமெலாந் திருவிளையாடியமதுராபுரிதனி

தாமரஞ்சிதபுய சோமசுந்தரநய

தாரமாங் காரணி (சர்)

---

வங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு,

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாராதி நாமகன ரூபவிப காரமிகு

மாயாவி லாசமிதி லேலைதடு மாறிவெகு

பாடேப டாமலிது நாடகமெனவுளவு—பகர்வாயே

சீரான வாழ்வுபிணி தீருடல்கி லேசமது
ஞானானு பூதியழி யாதபுகழ் பாடுதமிழ்
சேராவ லீகைபுனே வாகைவர மேயினிது-தருவாயே
போராடி யோடிமறு காலனுகி மூடுநுதல்
நேரான தேடுதெரிய நேரிலதி சூரன்வரு
போதாதி தேவசிவ நேசமன மானலய-வகையாலே
ஏரார்கை லாசபதி ஜோதிவடி வோடுறையு
மாதார காதிருந லாரடியர் பூசைமகிழ்
ஏனாதி நாதசுக போதவுசி தாகியம-நெறியோனே.

தையலே சையோகம் என்ற மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

எந்தவிதந்தனி லுந்துணை தந்தாள
ஏனோவின் னுந் தாமதஞ் சரி
தாமேனோவர் மமே நிதம் (எந்)

அநுபல்லவி.

விந்தை தருஞ்சித்தி வித்தகனே சத்தி
வேலா சுசீலா மறைமூலா வனுகூலா
வேடிச்சி நன்னேசனே காளாம்
பாடிக்கு மகேசனே (எந்)

சரணங்கள்

நானிங்கொருபாவி நாளுந்துயர்மேவி
நைந்தேன் கரைந்தேன் சிதைந்தேன் அலைந்தேன்
நம்பிமோ சமாகுமா பழி
யும்பின்வீ ணேபோகுமா (என்)

தொண்டர்க ளீடேற்றஞ் சொல்லும் புவிதோற்றம்
சூதோ யிராதோ பின்னேதோ என்பால் வாதோ
தோஷமே யில்வாகனு முரு
காகுஞ்ச ரீமோகனு (என்)

போத குருநாதா புலவர்க் கொருதாதா
புண்யா காருண்யா லாவண்யா சுப்ரமண்யா
பூமிபுகழ் யோகனே முத்து
சாமிதமிழ்த் யாகனே (என்)

விருத்தம்.

என்னபிழை நான்செய்தி ருந்தாலு மன்னித்
திடும்படி யிறைஞ்சுகின்றேன்
எப்போது மென்மனதில் வைப்பாக நீவந்
திருக்கவே வேண்டுகின்றேன்
அன்னைதந் தையர்தம்மை நிந்திக்கு மூடரிடம்
அணுகாத விரதமென்றும்

அடியேன் அனுஷ்டிக்க ஆவலுறுகின்றேன்.
அதற்குமேலென்ன சொல்வேன்
வன்னமிகு நடனமிட மயில்மேலலங்கார
மதுரமாணிக்கமணியே
மாவுஞ் செழுந்தேனும் வள்ளிக்குறத்திதர
வாங்கிமகிழ் மணவாளனே
சின்னமாங் குயில்மதன் சேனையும் பூசனை
திருந்துதிரு நல்லூரில்வாழ்
செம்பாக குணசில சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவேலனே.

---

இராகம்-பிலஹரி-தாளம்-சாப்பு.

பல்லவி

என்னகேள்விமுறை இல்லையோசாமிபராமுகமிதில் (என்)

அநுபல்லவி

பொன்மயூரப்ர சன்னு பழநிமன்னு என்னையா (என்)

சரணம்

பூமியெல்லாந்தொழ வேமிகுந்தாய்சிவ
காமி சுதாமுத்து சாமி சதாநந்தும்
பூம்பாதா கடனும்பா துகாக்க விம்பா பின்னிதில்.(என்)

தொடும்பத் திநெறி குடும்பத்தில்வளர்
கெடும்புத் தியாலே விடும்பித் தன்யானே
துயரமே சித்தம் உயரான்சித்தம் அயராவேவிட்டாய் (என்)
தீராத சஞ்சலம் போராட நானுன் முன்
சீராட நீயருள் கூறுதிருப்பது
சீலமோவனு கூலமோ கலி காலமோவிது (என்

---

## வண்ணச் சந்தம்.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்

### கண்ணிகள்

களிசிறந்திடு பெண்களின்ப மெலாம் நுகர்ந்தனன்
குடி தொடர்ந்து மயங்கினன் துரைமார் விருந்துடன்
கண்ட நாடக சங்கமோகன
டம்பர் வினர்ப ணம்பெறுதவர்
காலடிக்குளு மோடி விழுந்தனன்
நால்படித்தும்வி வேகமுணர்ந்திலன்
சிரஞ்சீவி யா யிருக்க நேருமோ
ஒளி மழுங்கிய கண்கள் வந்தபினே முனந் தினந்
திரியு மந்த விடந்தொறுப் பலபேர் இவன் கெடும்
பண்புபாரென சிந்தைபேசவு
டன்கையாதர வொன்றுதேடுமென்

ஊழ்வினைப்பயன்       மாமன் மகிழ்ந்துபெண்
ணை கொடுப்பது       மேது என் புறம்.
பரஞ்சோதி ஞானநிட்டை சேருமோ

குளிர்கருங்கடலுண்ட கும்பனுமே       தகுஞ்சதுர்
முகனுமிஞ்சிய சந்தவண்டமிழோ       திடுஞ்சுகங்

கொண்ட மானுருவொன்றினனும
திந்ததாரக       மந்த்ரமாலிகை

கூறியப்பனை       மீதியி ருந்தவ
யோகர் சித்தர் சகாயம் விரும்புழி
வருஞ்சேயு மானமுத்து சாமியே

தளிமகந்த கடம் பணிந்தவனே       புனம்புகுங்
குறமடந்தை யிடம்பணிந்தவனே       தகுந் தகுந்

தந்தனைதன       என்று மாமயி
லுந்து மாடல்வி       ளங்குலாவர

தா திருப்பழ       னைபுரி நின்றவ
போரிடத்துணி தானவர் அந்தக
உரஞ்சாடு மாதி சத்தி வேலனே

## வேறு வண்ணச் சந்தம்.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

ஆரணப்ர சித்த சுத்த மோனவித்த கத்த வத்த
அநிசித்ய சத்தி யத்த வாகமத்தி நிச்ச யித்த

வனப்பிறை கங்கையறு குவப்பொடணிந்தசடை
யருக்கொரு மைந்தருயர் — வனப்புமிகுந்தபர
ரேகவடி வாயுலக மேவுலகெ
லாமுறையு நாதசுகபோதசுகிர்
தப்பரமசீலர்,

மாதவத் தருக்கு மிக்க சாதனத்திருக்கு முக்ய
மாமறைப்பொருட்குறித்த சிதனத்தி னத்தவித்தன்
அரக்கரை வென்றுமக ரருக்கருடத்துமிக
விருப்பொடு வந்தகட லினைக்கடைந் தன்பினமு
தாவலக மேவியுனை வேதருத
யாளர்மரு கோனெனவு லாவுகரு
ணைக்குணவிசாலர்.

போதகத்த னுக்கி ருக்கி மீதகத்தி ருக்கி வைக்க
வாதகத்தி ருக்கு மெய்க்க வோதுகத்த ரொத்தலத்து
மிருப்பவ ரென்பிழைகள் பொறுப்பவ ரன்பரக
மினிப்பவ ரங்குலிசந் தரிப்பவ ருந்தகைய
தேவருமி யாவருமனுதிபா
நாதனென வோதவளர் நீதருமை
முத்தமிடுபாலர் திருவேரகமதிலமராவலார்

ஆலமொத்த கட்குறத்தி பாலுவப்பு வைத்துநத்தி
மாதினைப்பு னத்தடுத்து சாலவித்தை யைப்படித்து.

வணக்கமு டன்பணிய விணக்கமொடன் பினிய
மொழிச்சர சம்பணிய வளப்பரு மிங்கிதவு

தாரபரி பூரணசு கோதயவி
லாசகுமரேசமுரு கேசருயர்
நித்ய விநோதர்.

பாவகத்த ரச்சமற்ற ஞ்தகத்த ரிச்சைமிக்கு
பாதலத்தொ டெத்தலத்து மீதுமுற்ற ருத்திவைத்த

ரசைப்புரி யுங்கொடியர் வசைப்பழி யெங்குமுற
தசைப்புக ழென்பதற வொறுக்குமக ங்கைகொடு

தேவரகம் வாதையுற வேசிறைசெய்
சூரருர மாயவடி வேரறவெய்
சத்தி வடி வேலர்.

வேதவித்தன் மத்தகத்து மாமுகத்த னித்த யத்தன்
போதகத்தி ருக்கு மிக்க மாமகட் கருத்தன் முற்றி

யுருத்திகழ் நிம்பநிழ ழிருத்தருள் கொண்டபரன்
ஒருத்தன்ம னங்கனியவ் வனத்தழ கின்பமிகு

சோதரவி நோதநவ நீதகுரு
சாமியெம தாதரவ தாகவரு
முத்தம குணாளர் செகமாதி தொழுதகைய காவலர்.

வாரணத்தை வித்த ரித்த கேதனத்தர் வற்புறுத்தி
பாமறத்தை மற்று நித்த பூதரத்தை யுக்க விட்ட

வயிற்கர ரஞ்சலிசெ யுயிர்க்கரு ளின்புறுமை
வருக்குய ரன்பாக மிருக்குந ரந்தமயி
லேறிவிளை யாடுமொயி லேயிலகு
பாலகும ராதிபதி யாகவளர்
முத்திதருநாதர்.

சாகரத்தி டத்தொ லித்த சூதனைத் தொலைத்த வித்த
மாதிரப்பு யத்தர் நித்த மோது நர்க்க கத்தி ருப்பர்.

எமக்கொரு நண்பரென விருப்பவர் சிந்தை மிசை
யிருப்பவர் சந்ததமும் விருப்பவர் சிந்தைமிசை
யாகவுயர் போகபல யோகமும்வி
வேகமுமெ மாவலக மேவுவகண்
டேற்றருளு நேயர்.

மாதரத்த நற்ற ரத்த மாதிரத்தி ருத்துசித்த
மாய்கையற்று நற்றவத்தி லேமகத்து வத்தை யுற்ற
வகத்திய னின்புறமெய் யகத்தியல் கண்டுதமி
ழுகத்திய ரும்பலவு மிதத்திய லுங்கருணை
நாடியுப தேசமுறை யேயுரைசெய்
வாதகிரு நாதசிவ சோதியுரு
விற்றிகழ்ச காயர் சரணாகதி யருளு முதாரர்

மாதொருத்தி பத்தியிற்சொன் மாதவப்பெ யர்க்குறித்த
வாதிமைத்த பத்தி யற்ற பாதகர்க்கு வெட்க முற்று

சரத்தைய ரிந்தகனை வனுக்கும னம்பதறி
வெருக்கொள வந்தவள்கை யிருக்கொள நன்குதவி

நீடுமருள் சாடியரு ளோடியருள்

விடமரு மாடிலகு தேடருமு
தற்பொருள் விதானர்.

ஓதுமுந்த மத்த வத்தர் சேவையிற்றி னத்துநத்தி
யேதுவற்ற வித்தை கற்றுத் தீதகற்று சித்த மற்ற

வெனக்கும னங்கசிய வருட்டமி ழின்பநிதி
விருப்பொடு தந்துவகை யிருப்பவு வந்தெனது

பாவிலதி மோகமுற வேகொள்கரு
ணாகரகு கேபவ நாசவரு

ணைக்கமலபாதர்

தானகத்தி ருக்கு மொப்பில் கோன்மகப்பிடிக்கு முத்த
மேமகிழ்ச்சி யிற்கொடுத்துக் கானகக்கு றத்திகொர்க்க

மலைக்குமி குங்கவன மிகக்கொடு வந்துமரா
மெனத்தனி நின்றுபல ரொலிக்கொளு மன்புளவர்

ஓதரிய தானவன மேவுசம
ராபுரியி லேவளர்கு மாரகுரு

பத்தரகம் வாழ்வார், தவமேவு குடிலைவரை மீதிலே

## வேறு சந்தம்.

இராகம் புன்னகைவராளி தாளம் சாப்பு

பூதரவம்புயனுர் தொழும் பூதரவம்புயனுர் மயில்

போலவேனலின் காவலார்மினை
யாளவேனலின் காவலார்சிவ
போதவரம்புடையார் சடை நீதமரம்புடையார் சுதர்

போகமேவுமி னைவலார்கலை
யாவுபோதுமி னைவலர்சுரர்
பூசிதசுந்தரனார் அடி யார் பரசுந்தரனார் அதி

போதகாதிப னாதியார் பரஞ்
சோதியாயவ னாதியார்
தாரனார் அருள் புரியு தாரனார்
பூமின்வணங்குகையார்வள்ளியான வணங்குகையார் திகழ்

பூதமாகிய தாயினாரறு
மீனுமாமகிழ் தாயினாருள்
வேதநெடுங்கடலார் அசு ரேசனெடுங்கடலார் மயின்

மீதுலாவிய வேகனாருயிர்
யாவுமேவிய வேகனார்துதி
ஓதுவர்சங்கமுளார் படு பாதகசங்கமுளார் தினம்

ஓதநீடிய வாரியார்கரு
வாதிலார்புகழ் தாரியார்
சாரியார் கயவரைவி சாரியார்
நீதகலம்பரமே வன மானயிலம்பரமே விழி

சேருமான்மக வாசையார்துதி
கூறநாடிய வாசையாரொடு

வேலினெடும்படையார் இனிமேலெலேயும்படையார்-கனல்
வேய்கணேறிய பாலனுரனு
கூலராகிய பாலனுர்வளர்

காரணசுந்தரனர் குரு வாபுராகந்தரனுர்-உயிர்
காதுதீதுள காலனுர்பய
மேவராதுசெய் காலனுர்
மாரனுர் புகழுயர்கு மாரனுர்.

சேயரியம்பரியார் சுதர் நீயரியம்பரியார் செக
மாதிதேடிய மாலேயார்மது
நீபநீடிய மாலேயார்திரு

மாமயிலம்பதியார் கரு வாமயிலம்பதியார்-கவி
வாணராதிய ராயினுர்திரு
வாணராதிய ராயினரிகல்

மாசமரம்புரியார் எழின் மாசமரம்புரியார் மலே
வாயுளார்மிகு வாயுளார்மயல்
வாயுளார்வரு வாயுளார்
மாலேயே கொளவெனது மாலேயே.

## வேறு சந்தம்.

குருதே சிகனுர் சிவசுப்பிரமணிக்கு
விலேகா மெனவே தமிழிற் கவிதொடுக்கு

மருமைப் புலவர்சித்த மலரிற் றினசடிக்கு
மிருபொற் கழல்படைத்த பெருமைக்குமாரர்

கருணை கரவேள் பொதியக் கிரியிலுற்ற
குருமா முனியா லருண்மெய்ப்பொருளையொப்பி
ஒருகைக் கிளியினுக்கு முதவிப் புகழ்பொறுத்த
கருணைக் கடல்படைக்கை பெறுசுத்தவீர

குலசே கரனுர் சகுணக் கடவுளர்க்கு
ளுயர்சீ ருடையார் தனிநிட் களவிருப்ப
மருளிற் றருமொருத்தர் முதன்மைக் கடவுள்செட்டி
மனையிற் குளுமுதித்த புனிதக்குணாளர்
அயிலதனை லமர்க்களத்தை வெல்லுவார்.

கொலைவேடரறவே கருதித்தவமியற்று
மவர்பா லணிமா மயிலிற் றிகழ்சிறுக்கர்
புலமைத் திறன்மிகுக்கு—மொருபத் தன்வசமற்று
வெருளச் செய்யலகைக்கோ—ரமனைத்த பாலர்

அருணை புரியா லயவட்ட மதினுக்குண்
மனையா டனையோர் தவசிக் குதவுபத்த
னனைப் பொருண்முடித்த—கிகரிக்குவடபக்க
மொருசொற் பகருநித்த—ருலகச் சகாயர்

குளிர்தா மரையா கியதொட்டி லதனுக்கு
ளொருசே யெனவா வியலுற்ற முருகப்பர்
தருணத்தி லெமதிச்சை—வழிநிற்கு முயர்சித்தர்
பொருகுக்கு டமுழக்க—மலிவுற்ற தோளர்
அடியவர் வாய்மையைக் கருத்திலுள்ளுவார்

180073
சென்னை-600 008.

திருநீ றணியா தவன்[illegible] கருவிமிக்க
மதுரா புரியூர் வழுதிக்கருள் கொடுத்த

கவலையுற் றவனைமெச்ச—மவருக் கினியசட்டி.
விரதத் தின்கருத்த முடியச் செய்தேவர்

துணிவே வடிவா கியசக்தி யமதுற்ற
கவுமா ரரையோர் கொதுகிற் கருதுநர்க்கு

நிலைகெட் டறிவுகெட்டு—வழிகெட் டழகுகெட்டு
விழிகெட் டலையுகட்ட—முறவிட்டவேடர்

திரையா ழியல்வா ழவுணைக்கருவ றுத்த
பெருமா னெடுமால் விழிபெற்ற மகளிர்க்கொ

ருரிமைக் கணவர்பற்பல—கனவிற்பல்வடிவத்தொ
டொளிர்சத்தி பெருமிட்டர்—மலையுச்சியாளர்
செபிரறு சீர்தொடுத்து மெத்த நல்குவார்

சினைமா முகில்சேர் பொழிலிற் றினைவிளைக்குண்
மயில்போல் வருவார் மயன்முற்றி யவர்செப்பு

மொழியிற்ப ரதவித்து—விழியில்சு ழல்வதற்று
வலியத் தொழுதிரக்கும்—விடர்சுற்று சாரல்

வளமே விடலா வியமக் கிரியும் வெட்க
வடமே ருவைநேர் சொலவிற்கு மெழில் பெற்று

முனிவர்க்கு மமரர்க்கு—முரகர்க்கு மனிதர்க்கு
மிவரொக்கு மெவருக்கு—முயிரொத்த நீடு

செயலே லொருமா நதிமத் திபிலெவர்க்கு
மொருநா லொருபே றறிவுற் றிடவுணர்த்தி

மலையக் கிரியினுக்கு—மகள் பெற்ற மகவொத்து
முதிர்சொற்ப னுலகட்கு—மிகவிச்சையான
திருவுரு மாயலைக்கடுத்த நெல்லையாய்.

---

இராகம்-நோட்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

மாதுபாக மானவா வானவா வந்தனம்
மாமறை புகழ் சொலும் மாசிலாத தாயகா
வாகா சிற்பரா தற்பரா வாமனோகரா

வடிவனிலா சிறியகிலா
மதிபுனைவாய் நதிவனைவாய்
மார னீறடி யோய் மாலயன் தேடி யோய்
மங்களா சங்கரா (மா)

கானமேவுரஞ்சிதா கந்தவே ளின்பிதா
காலனைவிழ மோதுங் கருணாகராசிவா
கானமேற்றவா நீற்றவா கட்கடாக்ஷவா

கரியுரியாய் அரியறியாய்
நரிபரியாய் வரவிடுவாய்
கால்களுங் கூரா கங்கணம் பூணரா
காரணா ஆரணா (மா)

---

## இராம நாடகம்.

ஸ்ரீராமர் வனஞ்செல்லுஞ் சமயஞ் சீதாபிராட்டியிடம்.

கலித்துறை.

படுக்கை மண்ணாகும் உணவு கிழங்கு பழஞ்சருகே
அடுக்கு மிடங்கள் நடக்கவொண் ணாதமுள் ளாகுமங்கே
தொடுக்குமிருகசஞ் சாரம் பயந்தருந் துன்பமெத்தக்
கொடுக்கும்பெண் ணேவன வாச முனக்கனு கூலமன்றே.

சீதாபிராட்டி ஸ்ரீராமரிடம்.

கலித்துறை.

கோலா கலம்புரி கோதண்டவீரா குலாவி யென்னை
மேலான கண்வைத்துப் பாராத:நாளென் விதிவசமா
பாலா பழமா பகர்சினி யாநல்ல பாபசமா
ஏலா தெவையுநின் மேலாசைகொண்ட விளங்கொடிக்கே.

---

ஸ்ரீராமர் வனஞ்சென்றதைப்பற்றிப் பரதன் தன் தாய்
கைகேசியைக் கோபித்தல்.

இராகம் - பியாகு - தாளம் - சாப்பு.

பல்லவி

நாயகனைக் கொன்றாயடி
நாரியல்ல நீபேயடி

### அநுபல்லவி.

மாயவஞ்சகி      பாகிராமனை
வனத்துக்கனுப்பி      மனுச்சக்கிரவர்த்தி (நா)

### சரணங்கள்

குலத்திற்கு முதல்      மகனிருக்கையிற்
குறித்தாயோ பட்டம்      எனக்கு நீ
நிலத்திற் பழியை      விளைத்துக் கெடுத்த
நீலிகெட்டஜெக      ஜாலி எட்டிபிரு (நா)

அண்ணன் காய்கனி      உண்ணவும் நாம்
அமுதவிருந்து      பண்ணவும்
எண்ணுமரசாக்ஷி      யினிநமக்குமா
இப்புவி யென்பய      மொப்பிச் சுமக்குமா (நா).

---

## சீதாபிராட்டி வனக்காக்ஷி.

டலமகஜ லோட்டி என்ற வர்ணமெட்டு.

### கண்ணிகள்.

அதிசயமனேகம்      ஆமாம்      அமைந்த வனவாசம்
இதிலானி இன்பந்தானி எப்போதும் வாழ்வோம் மேவி

இருகண்ணுஞ் சாக்ஷி      என்னென்ன காக்ஷி
இந்திரபோக நிதிதுக்காக்ஷி      பல்லவோ

இதிலுந் தாக்ஷி யல்லவோ

(ப்ராணபதி) ஈடிதற்குச் சொல்லவோ
ஏதே தீடிதற்குச் சொல்லவோ. (அ)

---

சித்ரகூட பர்வதத்திலிருந்த இராமர் முதலானோர்களிடம் சக்ரவர்த்தி உயிர்துறந்தாரென பரதன்வந்துசொல்ல இராமர் புலம்பல்.

## விருத்தம்.

அருமையா யென்னை வளர்த்திய காதல்
அப்பனே சக்ரவர்த்தியுன்

திருமுகங் காணச்சில தினங் கழித்துச்
சேருவேன் வனம்வந்தபோது

பெருகுவாஞ் சையினு லுன்னுயிர் போகப்
பெரும்பாத கியை அடைந்தனையோ

தருவிதிக் கென்ன செய்குவே னடியேன்
சஞ்சலந் தீர்த்திட லரிதே.

---

### கண்ணாயிரம் படைத்த என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மெய்யே எந்தனைப்பெற்ற ஐயா அம்புவியுற்ற
விமரிசை முற்றிலுமகலவிடுத்துநீ சென்றாயோவின்
ணமரர் துதித்திடு பதவி கிடைத்திட நின்றாயோ

ஐயோ கொண்ட நினைப்புப் பொய்யோ என்னபிழைப்புப்
பூரணமாய் நிறை வேறிவராமலே போனதே என்
னாரண்ய வாசமோர் காரணம்போலவு மானதே

காட்டுக் கெனையனுப்பிப் போட்டு நினைவுதப்பிக்
கதிபெறவுற்றதும் விதியின்மகத்துவநேர்த்தியே மத
கரியுனு மாவிளங் கனியதை யொத்தது சீர்த்தியே

நாட்டிலிருந்தனக்கு மேட்டிமை மைந்தனிட்டே
நவில்கருமத்தொழில்பொலியநடத்தவுமில்லையே பிள்ளை
உதவி கொடுக்கிலை யெனவசைவைப்பது தொல்லையே.

---

சித்ரகூடபர்வதத்திலிருந்தஸ்ரீராமரைப்பரதன் அயோத்தி
நகருக்குப் பட்டங்கட்டிக்கொள்ள அழைத்தல்

### குடியிற் பிறந்ததுயிலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பட்டாபிஷேகத்தை விட்டுவிலக்கியோர்
கட்டாயத் தென்தாய்த றத்திய காட்டினிற்
பட்டத்துத் தேவியுடன் றம்பியாம்
லக்ஷ்மண னுவியுடன்

பாதகந்தீர் மாதவஞ்செய்
பாதங்கண்டு பண்ணுவேன் விண்ணப்பமே (பட்)

கட்டாகக் கேட்டுக்க டாக்ஷிக்கவே னுமோர்
காலப்பிசகென்று யோசித்திடாமல்
எட்டிய யோத்திவந்து பட்டத்தைக்
கட்டிக் கொண்டுபசுந்து

காக்ஷி யீவாய் குக்ஷிபர
சாக்ஷி யாளா கற்பக மாணிக்கமே (பட்)

தாய்வரம்மா அது வாய்வருமா சற்றே
ஆய்வது செய்துபின் மாய்வது நன்றென்
றேயுன்னை நானடுத்தேன் ராமண்ணா
தேயம னைவிடுத்தேன்

ஏகிடேனே த்ரோகி யானே
ஆகினேனே என்செய்வேனிவ் விதிக்கே (பட்)

விருத்தம்.

நீதிக்கு விரோதமாக நின்றுநான் பட்டங்கொள்ளேன்[ன்
ஆதித்தன் குலத்தார்கண்முன் அயோத்தியிலிருக்கமாட்டே

சாதிப்பாய்நானுங்காட்டிற்றவக்கோலம்பெறுவேனண்ணு
போதிக்கவேண்டாம்போதும்போதும்பான்பெற்றபேதே

---

வேண்டினேன் சையோகமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

(ராமர்) தந்தையிட்டகட்டளை தாய்வரத்தையொட்டியே
வந்துபட்டங் கட்டியே வாழ்வதற்கோரட்டியே

(பரதன்) அட்டியில்லையண்ணு அண்ணு அப்படிமனத்திலெண்ணுக்
கெட்டியாய் வந்துசூடுங் கிரீடங்காணுக் கண்ணேர்கண்ணு

(ராமர்) கண்ணுமென் சகோதரா கசியுமன்புப் பரதனே
எண்ணுமன விரோதரா யிருந்தோமோநா மிதில் முனே

(பரதன்) முன்னே யிருந்தராசர் முறைதவறிடாநரேசர்
இன்னுளி லெண்ணென்மத்தை எசிப்பேசுவாரேநேசர்

---

திருப்புகழ் சந்தம்-இராமர்-சொல்.

கண்ணிகள்.

முந்துபதி னுலுவரு டம்போன பின்புநகர்
வந்துமகு டாதிபதி யென்றேயி ருந்தனது
முன்சகல தேசமன்ன ரும்பேண நன்கரசு—புரிவேனே

பரதன் சொல்.

தந்திரிகைகேசிமக னர்த்தோக வர்ந்தரசு
கொண்டொரு ராமனைவ னம்போக வஞ்செய்தது
சந்ததமு மீடுபழியென்றேச னிங்கள்சொல—வளர்வேணே

---

தென்னை கமுகுகுலை என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

தாயாரிடஞ் சொல்லிச் சண்டாளன் பரதன்
தந்தையிடத்தில் வரம்வாங்கிக்
கோயிலபோத்திரிற் கொளுக்கொண்டானெனக்
குவலயஞ்சொல்லும் பழியோங்கி (தா)

கேடுவிளைத்தகை கேசித்தாய்முகம்
நாடிநான்விழிக்க மாட்டேன்
கூடவருவேனண்ணா குடும்பசசனியனொரு
கூனிகோளிதுசொல்லிப் போட்டேன் (தா)

ஸ்ரீ ராமர் பரதனுக்குச் சமாதானஞ்சொல்லல்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி

தம்பி பரதா சொல்லச்
சத்ருக்னனின்மேற் குற்றமிருக்கிறதா (தம்)

அநுபல்லவி.

இன்பதுன்பங்களெல்லா மிந்தமனோசிருஷ்டி
எந்தக்காரியத்திற்குந் தந்தைதாய்சொல்லனுஷ்டி
பின்பதிற் கீர்த்தியுண்டு பிள்ளைகளால்வட்டி
பெரும்பொருட்மாக்கியமாகுந்திரும்பித்திரும்பிக்கொட்டிப்
பேசுகிறாய் புகழ்சேர் தாயாரை
ஏசுகிறாய் மகுடாதிபத்தியங்
கூசுகிறாய் விழிநீராலென்னைப்
பூசுகிறாய் அடா (தம்)

---

## பரதன் விருத்தம்.

தாமரைப்பாதங்கொண்டு தரித்தபா துகையா னாலும்
நேமமா யடியேனுக்கு நேரமீ தருளல் வேண்டும்
ஆமதை வைத்து நான்சிம் மாசனத் தருகே நின்று
மாமனு நீதிப் பூசை வழங்குவேன் அண்ணா அண்ணா

## ஸ்ரீ ராமர் பரதனுக்குப் பாதுகை தரல்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

தருகிறேனிதிற் றடையில்லை—பின்சே
தங்கிடாமலே செல்லுவாய்

அருமையான நம் அயோத்திக் குடிகளுக்
கதிகதைரியஞ் சொல்லுவாய்

### பரதன் சொல்.

சொல்லுவேன் தாருஞ் சோதிப்பாதுகை
துணைகண்டாலுண்டோ துக்கமே
எல்லையீரேழு வருஷமானபின்
இருக்கவேணும் நான் பக்கமே

### ஸ்ரீராமர் சொல்.

பக்கநேர்தம்பி பரதனேயந்தப்
பருவத்திற் பட்டஞ் சேருவேன்

### பரதர் சொல்

மெய்க்கவேவாரா விட்டாலக்கினி
வீழுவேன்வரங் கோருவேன்

---

பரதன் பாதுகையைச் சென்னியில் வைத்துக்கொண்டு தன்னுடன் வந்தவரோடு நந்திக்கிராமத்துக்குப் புறப்பட்டு வருதல்.

இராகம்-ஆரபி- தாளம்—ஆதி.

### பல்லவி

பாதுகையே நல்ல
பரகதிதருவதும் ஆசிதபுரிவதும் (பாது)

அநுபல்லவி.

சீதையுடனேசித்ர கூடத்தில்வந்த
ஜெயரெகுபதியதி தயவொடுதந்த (பா)

சரணங்கள்.

ஓதுமுலகிலெனக் கிலையபவாதம்
ஓடிவந்தேனேய னேகங்காதம்
வேதரகசியம் விளங்குவிநோதம்
மேலெனக்கினியென்ன வேணும்ப்ரசாதம் (பா)

அண்ணனிருக்கத்தம்பி யாளரசாக்ஷி
ஆகாதாகா ததுவெகுதாக்ஷி
உண்மையென்தாய்மன மொப்பிடுஞ்சாக்ஷி
உலகிலெவரெவர்க்கும் விலகாதகாக்ஷி (பா)

எக்கமறப்பெற்றேன் இதுசித்ரகூடம்
ஈரேழுலகுமுண்டோ இதிலும்விசேடம்
நாட்கவிமணிமுத்து சாமிதன்பாடம்
நாடறிந்திடவேநான் சூடுங்கிரீடம் (பா)

---

## நந்திக்கிராமத்தில் ஸ்ரீராமர்பாதுகையை பரதன் பூஜித்தல்

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

ஸ்ரீ ரகுநாயகன் பா — துகைக்காக்ஷி
பாதுகைக்காக்ஷி — எதிினித்தாக்ஷி (ஸ்ரீ)

தீங்கினென் தாய்செய் — பாங்குசகாயம்
ஓங்கியநேயம் — தாங்குமுபாயம் (ஸ்ரீ)

கொத்தலர்சாத்தி — மெச்சுவேன்எத்தி
சித்தியயோத்தி — நத்தியநேர்த்தி (ஸ்ரீ)

பந்தனராமம் — சிந்தையின் க்ஷேமம்
நந்திக்கிராமம் — முந்தியநேமம் (ஸ்ரீ)

சரபவிசேடந் — தங்கியபாடம்
பரதகிரீடம் — பாக்கியபீடம் (ஸ்ரீ)

---

## ஸ்ரீ ராமர், சீதை, லக்ஷ்மணர், மானைக்கண்டு தர்க்கம்.

இராகம்-மால்கோஷ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

(சீதை) மேனியெல்லாம் — வெள்ளியே
விளங்குகின்ற — புள்ளியே
மானிங்கேதோவந்து — விளையாடுது துள்ளியே

(ராமர்) நானிது வரைகண்டதே இல்லை — கண்ணே
நானிது வரைகண்டதே இல்லை

நல்லபொன் வண்ணம்
நமக்குமே எண்ணம்

(லக்ஷ்) நம்பிக்கொண்டு நம்பிக்கொண்டு
னைகிற தேனண்ணை செப்கையிலேயிது
பொய்யுருவந் தின்னம்

(சீதை) பொய்யென்றநின் றம்பிக்கே
புகலவேண்டாம் நம்பிக்கை
யைப்பற்றவேனுஞ்சென்று கையில்வேடிக்கை

(இராமர்) அடிதையலே நான் கருவேன் பற்றியே
தடத்தில் சுற்றியே நல்ல
தந்திர முற்றியே

(லக்ஷ்) அண்ணா கேளும் அண்ணாகேளும்
தந்திரமாகவே சிந்தையறிந்திட
வந்தமாரீ சனிவன்

---

வாராயென யணைய என்ற வர்ணமெட்டு.

இராகம்—ஆனந்தபைரவி-தாளம்.சாப்பு,

பல்லவி.

தாகந்தீர்க்குந்த டாகஞ் சோலையொரு
பாகம்மேலுமுப யோகம்
தனிவழியுலவிய வனமதிலதிசுக (தா)

அநுபல்லவி.

வாகானமாங்குயில் மாமயிலாடையில்
வண்ணம் பாட என்
மனமுருகுதுபரி மனமுடன்வருகிற (தா)

சரணம்

மந்தமாருதவ சந்தமானந்தவை
போகம்வேணுந்தவ யோகம்
மதுகரமிசைபயில் வதாகல்மே (தா)

சந்தான கிருஷ்ணைசௌ பாக்கிய கோலாகல
சந்துஷ்டி யே செந்
தமிழொடு பழகிய முனிவர் பொதிகையின் (தா)

---

நாரே நாக்கர் என்ற வர்ணமெட்டு.

பல்லவி

சோலைச் சிங்காரஞ் சொல்லவெகு கெம்பீரஞ் (சோ)

அநுபல்லவி

சேலுலாவும்பொய்கையோரஞ்சேருமாலைநன்னேரஞ் ()

சரணங்கள்.

நல்லலரி மல்லிகைப்பூ முல்லையுடன் சாதியே
செல்வமருக் கொழுந்தான் செவந்திப்பூவுஞ்சோதியே ()

காசுஷி யிருவாகூஷிமலர் தாகூஷிவில்லமந்தாரை
மாகூஷிமைக்கனிரசங்கள் வடிந்தன செந்தாரை (சோ)

பிச்சியுஞ் சாமந்தியும்பி ணிக்கும் வெட்டி வேருமே
செச்சைநந்தியாவட்டையுஞ்செண்பகமுஞ்சேருமே(சோ)

வண்டினம் புரண்டுமது வண்டுபாடுங் காந்தாரங்
கொண்டசெவிக் கானர்தங் குயில்குருவிசஞ்சாரஞ் (சோ)

தென்றலு மகரந்தத்தை நன்றுகொண்டு பூசுமே
மன்றல்முத்துசாமிகவி வண்ணம்போன்றவாசமே(சோ)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தேஜோமயா னந்தம் நான்
றெரிசித்திட அற் புத ஒப்பந்தந் (தே)

அநுபல்லவி.

மாசேதவிரும் பூரணமதியம்
மாமேருவெனும் பாரவதிசயம்
மஞ்சமிகுஞ்சய னந்தனிலண்டியி
ருந்ததுகண்டும கிழ்ந்தது சிந்தை (தே)

பல்லவி.

சரபமுத்துசாமி காவி
தாசனை நிதமும் பூசனை புரியுஞ் (சர)

அநுபல்லவி.

புரவலன் நாளும் போஜமுணாளன்
பூவாய் உன்னொரு ஆவற் கண்ணாளன்
கருதுபுத்திசா ரத்தயாளன்
கட்டுரைக் கடங்கிவிட் டேன் குணாளன் (சரு)

சந்த விருத்தம்.

சிவனார் செலுத்து ரதமே யொடித்த
திறலான முக்கண் முதல்வோனே
தவயோக சித்தர் குணசீல பக்தர்
தழை தாரகத்தில் வளர்வோனே
கவலான பற்று மனமாயையுற்ற
கடையார் தமக்கு ளதிதூரா
அவிரோத மிட்டிவ் வடியேனை ரக்ஷி
அமலாது நிக்கை இறையோனே

---

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தென்மதுரை மீனாக்ஷி பாதந் தெரிசிக்கவேணுந்(தெ)

அநுபல்லவி

சிந்தைக் கின்பம் சந்ததமுந்தோணுந் (தெ)

சரணங்கள்

| | |
|---|---|
| சொன்மணிச் சோதிக்கு | விண்மணியாகிய |
| சூரியனு | நாணுஞ் |
| சோபிதஞ்சேர் | ஆபரணம் பூணுந் (செ) |
| காலமெல்லாமலங் | கோலமாயைக்குள்ளே |
| கட்டுப்பட | லாமா |
| மேலாமோக்ஷம் | விட்டுவிடலாமா (செ) |
| சாதுஜனப்பிரிய | சரபமாமுத்து |
| சாமியுடன் | கூடி |
| பாதுகாக்கும் | பஜனையைப்பாடித் (செ) |

---

## தும்ஜாதீது முஸ்பர்க்குபான் என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

ஆறுமுகமுடையாய்—செங்கையி
லழகிய வேற்படையாய்
ஏறுஞ்சிகி யுடையாய்—காத்திடுதற்
கேனோ இன்ன முந்தடை—இறையவ
னேயித நான் கொடியாய்
என்மீ தினம் வாதுசெய்வ—தாகாதே
செய்தா லுனை நீங்கிப்பாவம்— போகாதே
எற்றினேன் கல்யாண—சுந்தரனே (ஆ)

---

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோஹனம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

வந்தனர் சுகந்த வுல்லாசர் கந்தியிற் செல்லூர்
செந்திரு நல்லூர் வாழ்தரு மமுதலிங்கேசர் உரு
மாறியேபலி தேறினார்மனை,தோறுமேகவி லாறினார் புனை
மண்டபத்திற்கண்டேனேநானே!மெய்மறந்தேனேஐயருந்
வாய்மலர்ந்தார் கேண்மடமானே [தானே

பந்தியன்னந் தந்தமாதிரி இன்னமுங்காணேன்
பின்னெதும்பேணேன் பக்கமாநீ நிற்பதேசரி தானப்
பாவிருந்தா லோகலந்தே மேல்வருந்தே னேயிடம்பார்
பீர்வையாதோ பாவையேஎன்றார்போகமனமே ஆகமுன
பாங்கதென்றேன் பாங்கரே நின்றார். [மே

கோலதிகந் தந்தாதையவே நீபரியங்கம் தாபரியங்கம்
வஞ்சமேன்தாகஞ் சிதையவே உன்றன்
வாரிலே இளநீரிலே மனநேரிலே யுளசிரிலே கன
வம்புசெய்தா லென்பசிபோமோ அம்மணங்கொண்டநன்
அன்பகமே தாமதமாமோ [மனங்கண்ட

சாலநீ சொலாயெனச்சொன்ன தமிழ்விடங்கர் அமுதலிங்
தங்கருத்தின் சங்கதியென்ன கவிச் [கர்
சரபமுடுமலை முத்துசாமியின் விரதபலனிடு கர்த்தராகிய

சங்கரர் மேலெங்கெனக்காவல் உண்டுமின்றுளே கண்டு
சாரநின்று ஓரதோ காவல் [நன்றுளே

---

## இங்கு வந்த என்புறு வைஎன்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

### கண்ணிகள்.

நித்தநித்த நற்பஜனைப் பத்தர் சங்கங் கூடிக்கொண்டு
நெக்குருகி நெக்குருகி நற்கீர்த்தனம் பாடிக்கொண்டு
நெஞ்சமே தஞ்சமே
அஞ்சாமற் பெற்றிருப்பாயானந்தமே நீடிக்கொண்டு (நித்)

தந்தைதாய் பந்துஜனர் சந்தையிலே வந்தகூட்டஞ்
சிந்தையிலே இந்த நாட்டஞ் சந்ததந் தீராதவாட்டங்
கந்தனைச் சிந்தனை
எந்தநேரத்திலுஞ்செய்திருப்பது வெகு சிரேட்டம் (நித்)

படிக்கிறது தேவாரமே இடிப்பதுசி வாலயமே
பிடித்ததி முடிக்கெவர் தாம் பேணுவர் பூமாலையுமே
அடிக்கடி துடிக்கிறாய்
நடிக்குறாய் நீ பின்னெழுந்து நல்லதுன்றுணையமே (நித்)

கோனருப்புக்கொட்டைமுத்துக் குமரமுருகேசனையே
தானவிலும் ஞானமுத்து சாமிக்கவி ராசனையே
நானய மாநண்ணி
நோன்புகொண்டிருந்ததுபோ யென்பலவாம்யோசனையே

பஜாயுமே தில்லேன காறுலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

மயூர மிசையேறி வாவேலா திரு
வள்ளி தெய்வயானை மகிழ்கூர் சீலா (மயூ)

அநுபல்லவி.

தாருகனேடுபல தானவரைவென்றவனே
சாயாத வேங்கைமா மாக வனம் நின்றவனே
வாருசடையோன் செவியில் மந்திரம்பு கன்றவனே
மானில மீதிசைய முத்தொழில்பயின்றவனே
வாவாகல் யானைசந்த ரன்பணியுமேலவா
வையாபுரி வாழ்பவனே. (மயூ)

---

ஜப்தகலந்தரு என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சப்தங்கலந்தசி லம்பணிபதமுறு
சரவணபவ ஓம் குருநாதா
தாரணிமிசைதினந் சாற்றிய மறைகளுந்
றண்செவி புகவில போதகா
சத்திவேலெடுத்தபன்னி ரண்டுகையனே கேட்கும்
முத்தி வீடளித்திடற்கு கந்தமெய்யனே மறை

ஞாலாவு மையவள் சுதா மன
முன்னி நின்ற னன் கல்யாண
சுந்தரன் சதா மிகு (சப்)

---

## தாமோதரராமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆவலானேன் சேவையினி யருள்யெம்மானே

அநுபல்லவி.

ஆமோதர வடத் தாமோதர னேநீ
யாளாமலெவ்வினி லேராளே பாக்குவ தேனே (ஆவ)

சரணங்கள்.

பூமகள் மருவும் புருஷோத்தமனே
மாமடுவியானை தனைக் காத்தவனே
பூமனையுக்தியிற் பூத்தமாதவனே
சேமமாய்க் கல்யாண சுந்தர தாசுக்குத் தானே (ஆவ)

---

## தாயே நமஸ்காரம் என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்

வாசுதேவ போகா வரமருள் வராகா
தேசுயருந்தேகா செய் யாள் மருவுமோகா

ஜெகநாதா விவேசா மிகுந்
திடத்தசஞ்ச வடிக்குத் தொண்டுசெய்
திருக்கர்செய் யீசா (வா)

பூந்துளபத்தாரா புகழும் ரகுவீரா
வாய்ந்திடுமுதாரா மலரடியைத் தாராய்
திருமாலெனும் பேரா சிறு
வனுக்கருள் புரி சிறைக்கருடன்மீ
திருக்குமொய் யாரா (வா)

---

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சங்குசக் ராயுதனே வெண்
சங்குசக் ராயுதனே

அநுபல்லவி.

சதுர்மறைதே டரியகுண
கரமுதலே பரவெளியே
சாலமான தேசெய்யாம
லாளுவா பிள்ளேயே வெண் (சங்)

சரணம்.

பாரமலையை யெடுத்தவனே வின்
மாரியதனைத் தடுத்தவனே
மாயாவிலாசா வா ஸ்ரீனிவாசா

வனமதில்மான் படக்கணையே
வியதிரனே மலிபுயனே
மாது சீதை நாதனுன
சிதராலோ காதரா வென் (கல)

யாணர்மிகுந்தமி ழாலேகவி
யாணசுந்தரன்வ ணக்கஞ்சொலி
யாசித்தேன் நின்றுட் பூசித்தேன் நிற்க
அருளுவையே பரமதயா
பரபுயல்வே ணியபுனிதா
யானையாதி மூலமென்ன
வோதிநின்ற காலொன்ற (சங்)

---

மஞ்சுநிகர் குந்தளமின்னேஎன்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்—பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

செங்கைவடி வேன்முருகையா சிவசிவாச ரவணபவா
சேவடி துதித்தனன் மெய்யா என்
சிந்தைநொந்து வருந்துகின்றனனிந்தவேலையுகந்துவந்தரு
டேசிகனும் பன்னிருகைபாதினமுமூன்றன்செவியிற்படச்
செய்திடுவ முறையெல்லாம் பொய்யா (செங்)

மங்கைவள்ளி குஞ்சரிபாகா வனசன்முதல் சுரர்கள்பணி
மாமலர்க்கடம்பணிவாகா அன்று
மாசுபுரியும்நிசாசரர்கள்குல நாசமுறும்படி யாசமரம்விளை
வல்லமை மிகுந்தநல்யோகா மரகதமா மயிலின்மிசை
வந்தருள் வாயாரண யூகா (செங்)

எங்குனும்நிறைநிரந்தரா எழில்பழநிக் கிரிவளரும்
எந்திலே வள்ளாறு கந்தரா சரு [ணையற
வேசன்மகிழுப தேசகுகைதொறும்வாச அடியவர்பாசவி
வேற்றிடுஞ் சுகிர்தசுந்திரா இமவரசன் மகளருளும்
என்னையா கல்யாண சுந்தரா. (செங்)

---

நாரதன் சொன்ன காரணப்படி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்—ஆதி.

கண்ணிகள்.

மன்றலார்பரங் குன்றமாநகர்
வந்திடுங்கதிர் வேலா குற
வள்ளிகுஞ்சரி லோலா நம்பும்
வானவர்க்கனு கூலா மன்றுள்
மாறியேநட மாடினான்பெறு
மைந்தனைச் சீலா (மன்)

உன்றனைக்கதி என்றுநான்சதா
உன்னியதறி பாயா உன்றன்

ஊழ்வினையகற் | றுயா | மறை
ஓதுஞ்செந்நுவர் | வாயா | விண்ணில்
ஓங்கிமேருவைத் | தாக்கியேசென்டால் |
உடைத்திடுங்கார்த்தி | கேயா | (மன்)

அற்பவாழ்வீது | கற்பநாள்வரை |
அழிந்திடாதென | வெண்ணி | பணத்
தாசையாலிந்த | மண்ணி | லுள்ளார்க்
காளதாய்த்தொண்டு | பண்ணி | மன
மனுத்திடா துகின் | வனுத்ததாண்மலர் |
அருளுவாயருள் | நண்ணி | (மன்)

---

என்னடி நான்பெற்ற மங்கை என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தென்மதுரை மீனும்பிகையே தடாதகையே அம்பாலிகை
[யே என்றன்
பின்மைநீக்காதசென் | வகையே | உன்றன்
திருமலரடி பினைநிதந்துதி புரியடியவன் பிசையிதுகதி
இத்தம்வைத்தாளவக்கரையே | னிலை |
உத்தமியே பராபரையே | | (தென்)

புன்மையே னெய்துங்கவலையே எண்ணத் திலேயேகடலலை
[யே எனப்
போன்றதென்சித்தத்தி | னிலையே | யார்பால்

புகலுவேனிது புரமெரிபட நகைபுரியரனொடு திடமுடன்
பொற்சபையாடுங் கவுரியே சிக
ரச்சிலம்பீன்ற குமரியே (தென்)

யான்கடைத்தேறவுதென்றேமைச்சனன்றே யாவனென்றே-தயை
யாதுஞ்செய்யா துற்றாய் நன்றே திரு
அரிவாகினி சிவயோகினி பரிவாயுன தருளீகுவை
யாரணி சக்கரபாணி மகிழ்
நாரணி யானகல் யாணி (தென்)

---

## ஆலிலைமேற் பள்ளிகொண்ட என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

அக்கரையாய்ப் பேசவந்தாய்க்கைக்குள்ளாக நானுமேமே
லாமினிக்கி யாதிருநல் லூரனே—முத்து
சாமிதமிழ் சொல்லினலங் காரனே.

குப்பையணைந்தாலுங்கோழிவைப்பதுண்டுமுட்டையந்தக்
கொள்கைபற்றி யுள்ளடங்கி யோசிப்பாய்—மனந்
துள்ளினுற்போய்க் கள்ளிகண்முன் யாசிப்பாய்

வேணுமென்றால்வேணுமேபின்வேண்டாமென்றால்வேண்
வீணுக்கென்ன பாணிக்கிறசேதியே—மண்ணில்[டாமேநீ
ஆணுக்கும்பெண் ணுக்குஞ்சரி நீதியே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்

## கண்ணிகள்.

நாரதன் சொன்ன காரணப்படி
நாண்மலர்ப்பெருங் கன்னி தனை
நாளுமேமன மெண்ணி நிறை
நறுமணச்சோலை நண்ணி அவள்
நன்மொழியதா லின்புறுங் குக
நாதனே மோக முன்னி

தேரதன்மேலே சித்தசனேறிச்
சென்றுசென்றுகைப் பாணம் எய்ய
வென்றியின்றியே நாணம் சொல்ல
நன்றுகொள்வம்பர யாணம் ஜெயஞ்
சேந்தமேனியனீன்ற வேலனே
செய்குவேன்மனத் யானம்.

அப்பசுந்தமிழ்ச் சுந்தரர்க்கேயுன்
அப்பனும் ஒரு தூது கிருஷ்ணன்
அன்றி அர்ச்சுனற் கேது நினக்
கண்ணனேவந்த போது உற்ற
அன்பனே ஏழை துன்பமேதவிர்த்
தாளவும் என்றகாது

ஒப்புமிங்குனக் கென்று தானித்தம்
ஓமலிக்குதே பூமி தமிழ்
உடுமலைமுத்து சாமி சொன்னல்
லூர் அமுதப்பேர் வாமி ஆன
உன்னன்னைமெச்சு மண்ணமேலே எந்த
ளூழ்வினைதீர்ப்பாய் நேமி.

## ஸ்ரீ மீனாக்ஷியம்மை திருக்கல்யாணம்.

### அம்மை திக்குவிஜயம், சோமசுந்தரர் தரிசனம்.

இராகம் - இந்துஸ்தான் - தோடி - தாளம் - சாப்பு.

பஜாயிமே தில்பேல காஞசே என்ற வர்ணமெட்டு.

**கண்ணிகள்**

என்னைக்கண்டு கைவில்லைக்கீழ்ப் போட்டாயே
உன்கை வல்லமையை என்முன்னே காட்டாயே
வந்தசண்டையிலே நந்திதேவர் ஓடோட
அந்தச்சந்தடியிற் சண்டேசர் ஊடாட
முத்துசாமிக்கவி மாலையெல்லாம்நீசூட
நான்—சங்கதியுந்தெரிந்து முன்காணநேர் நாட. (என்)

---

## மங்களம்.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

**கண்ணிகள்**

நித்யமங்களம் சுகிர்தஜெய (நித்ய)
மநு நிருபர் நீதி பெறு
தரணியாதி யுறு (நித்ய)
சத்யலோக சரஸ்வதி சதுர்வேதம்
மெய்த்த விந்து நாதம்
அபரிமித முற்றஜீவபேதஞ்
சரபகவி முத்துசாமிக்கீதம்

முற்றுப்பெற்றது.

---

## இராஜவாழ்த்து.

தாஜ ராஜ ராஜ ராஜ என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஞாயமான செங்கோல் இங்கிலீஷ் ராஜாங்கமே—எந்த
நாளைக்கும் மாமுத்துசாமிக்கும் பேர்வைக்கும் ஞானயோகமே

நம்புதபாலுந் தந்தியும் வித்யாரம்ப ஹைஸ்கூலும்
நாடுங் காலேஜோடும் வைத்திய நன்னயமும் மேலும்

ரயிலுங் கப்பலு முன்கண்டோமோ நாளிதுபோலும்
நாளிதுபோலும்நாளிதுபோலும்நாமிது போலுமே (ஞா)

## முக்கிய அறிவிப்பு. ரிஜிஸ்டர் காப்பிரைட்.

இதனைச் சகல புஸ்தகக் கடைக்காரர்களுக்கும் பப்ளிஷ் செய்யுந் தொழிலாளர்களுக்குந் தெரிவிப்பது:—

உடுமலை முத்துசாமிக்கவிராயர் இயற்றிய பக்திரஸ கீர்த்தனங்கள்என்றதலைப்பெயரிட்டபுத்தகமிதை நாமே மனப்பூர்வமாக மதுரை புதுமண்டபம் புத்தக வியாபாரம் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களுக்கு ரிஜிஸ்தர் செய்துகொள்ளும்படி உத்தரவு கொடுத்திருக்கின்றோம் ஆகையால் இப்புத்தகத்தையாவது இதிலுள்ள பாட்ல்களில் எதையாவது அச்சிடுவார்களேயானால் ஷையார்கோறும் நஷ்டத்துக்கெல்லாம் பாத்தியப்படுவார்கள் என்பதைத்திட்டமாய் அறி[illegible]

இப்படிக்கு.

உ. முத்துசாமிக் கவிராயர்.

180073